20.08.2025
OS. No.250/2019

**வா.சா.1 –** திருமதி.ரேவதி, க/பெ.திரு.லெட்சுமி நாராயணன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

நான் தற்போது துவாக்குடி, ரெட்டியார் தோட்டம், என் ஐ டி பின்புறம் வாழவந்தான் கோட்டை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த ஒரு வருட காலமாக இந்த முகவரியில் வசித்து வருகிறேன். நான் குடியிருக்க கூடிய முகவரியை சத்யபிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. இந்த வழக்கில் கண்ட இரண்டாம் வாதி என்னுடன் வசிக்கவில்லை. வழக்கை தாக்கல் செய்த காலத்தில் இரண்டாம் வாதி என்னுடன் இருந்தார். இரண்டாம் தேதி மனநலம் பாதிக்கப்பட்ட நபர் என்றால் சரிதான். நான் என் சகோதரியுடன் சேர்ந்து வசித்த காலத்தில் அவரது மனநல பாதிப்புக்கு சிகிச்சை எடுத்து கொண்டார். எங்களை வீட்டை காலி செய்து பொருட்களை வெளியே வைத்து விட்டார்கள். அதன்பிறகு என் சகோதரியின் நிலை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு 2019 ஆம் வருடம் தாக்கல் செய்த பிறகு 2020 ஆம் வருடம் வாக்கில் எனது சாமான்களை தூக்கிப்போட்டு வெளியே பூட்டி விட்டார்கள். 2020 ஆம் வருடம் என்னை வீட்டை விட்டு வெளியே தள்ளிய பிறகு என் சகோதரி ஆனந்தவல்லியை போலீசார் மூலம் கூட்டிக் கொண்டு சென்று விட்டார்கள். நான் ஒளிந்து கொண்டு என் புடவைகளை மட்டும் எடுத்துக் கொண்டு எனது தோழன் வீட்டுக்கு சென்று விட்டேன். அந்தத் தோழன் பெயர் தெரிந்து கொள்ளலாமா

என்றால் அவர் முகநூல் பக்கத்தின் மூலம் நண்பரான கோபால்சாமி என்பவர் ஆவார். அவர் துவாக்குடி அண்ணா வளைவில் உள்ள ஒரு வீட்டில் வசிக்கிறார். ஒரு நாள் மட்டும் தான் அவர்கள் வீட்டில் தங்கி இருந்தேன். அவர் வெளியே படுத்திருந்தார். நான் உள்ளே படுத்திருந்தேன். எங்களை வீட்டை விட்டு வெளியே விரட்டியது யார் என்றால் நான் குடியிருந்த வீட்டை விலைக்கு வாங்கிய நபரின் நண்பர் விக்னேஷ் என்பவர் ஆவார். அவர் லால்குடி தாலுகா, விக்னேஷ் நகரை சேர்ந்த விக்னேஷ் ஆவார். நான் திருவெறும்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அவர்கள் எனது புகாரை ஏற்றுக் கொள்ளவில்லை. கணேஷ் என்ற ஒரு காவலர் அவர்கள் வீட்டை கிரையம் வாங்கி விட்டார்கள் நீங்கள் நீதிமன்றம் மூலம் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். எங்களை வீட்டை விட்டு வெளியே செல்லுங்கள் என்றும் கூறினார். நான் மனித உரிமை ஆணையத்திலும் புகார் கொடுத்தேன். முதலமைச்சர் தனிப்பிரிவுக்கும் புகார் கொடுத்தேன். அது தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் என் கைவசம் இருக்கிறது. நான் சொல்வது போல் என்னை யாரும் அந்த வீட்டில் இருந்து அப்புறப்படுத்தவில்லை என்றால் சரியில்ல. நானாக அந்த வீட்டில் இருந்து எனக்குச் சொந்தமான பொருட்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. கடந்த 2020 ஆம் வருடத்தில் இருந்து இந்த வழக்கின் இரண்டாம் வாதி என்னுடன் வழக்கு நடத்த ஒத்துழைக்கவில்லை. நான் என் சகோதரியை இந்த வழக்கில் இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டும் என்று தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால்

Above

சரிதான். அந்த உத்தரவின் அடிப்படையில் மீண்டும் கோப்புக்கு எடுக்க நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட சொத்தானது என் தகப்பனாரின் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தான ஏ செடியூல் சொத்து என் தகப்பனாரின் வருமானத்தைக் கொண்டு கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றும் அவருடைய சம்பாத்தியத்தை கொண்டு கெட்டி மெத்தை வீடு கட்டிக் கொண்டு அடைந்து அனுபவித்து வந்தார் என்று வழக்கில் குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் சரிதான். எங்கள் முந்தைய வழக்கறிஞர் கதிரேசன் என்பவர் அவ்வாறு எழுதிவிட்டார். நாங்கள் தாக்கல் செய்த வழக்கில் சொத்து விபரம் படித்துப் பார்த்தேன். சொத்து மதிப்பீட்டு விவரத்தை படித்துப் பார்த்தேன். மற்ற விவரங்களை நான் படித்துப் பார்க்கவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.)XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.